# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 331/2022**

Prosecution witness : 10

| | | | |
|---|---|---|---|
| Name: | நாராயணன் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A1, A2, A3 produced. A4 not produced. A5 present.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 18.12.2024**

**முதல் விசாரணை**:

நான் தற்போது தூத்துக்குடி போதைப்பொருள் நுண்ணறிவுபிரிவில் சிறப்பு உதவியாளராக பணியில் உள்ளேன். தூத்துக்குடி போதைப்பொருள் நுண்ணறிவுப்பிரிவு வழக்கு எண்.18/2021, ச/பி.8(c) r/w 20(b)(ii)(C) 29(1), 25 NDPS ACT வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட கஞ்சாவிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரியை பகுப்பாய்வுக்கு அனுப்ப வேண்டி வேண்டுகோள் கடிதம் ஆகியவற்றை மதுரை, முதன்மை சிறப்பு அமர்வு நீதிமன்றம், போதைப்பொருட்கள் மற்றும் மனமயக்க பொருள் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவேண்டி 13.10.2021 ம் தேதி காவல்ஆய்வாளரிடமிருந்து கடவுச்சீட்டு பெற்று மேற்படி சொத்துக்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்து RPR NO.695/2021 பெற்று ஒப்படைத்தேன். மீண்டும் நீதிமன்ற உத்தரவின் படி 18.10.2021 ம் தேதி நீதிமன்ற கடித எண்.1579/2021, நாள்.18.10.2021 என்று குறிப்பிடப்பட்ட கடிதம் மற்றும்

நீதிமன்ற முத்திரை பதிக்கப்பட்ட, சீல்கள் சரிபார்க்கப்பட்ட 15 முத்திரையிடப்பட்ட கவர்களை பெற்று திருநெல்வேலி தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைக்க பெற்றும் மேற்படி கடிதம் மற்றும் சொத்துக்களை 20.10.2021 ம் தேதி தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து நிலையம் வந்தேன். காவல்ஆய்வாளர் என்னை விசாரித்தார். கைப்பற்றப்பட்ட 15 மாதிரி கஞ்சாபொட்டலங்களை பகுப்பாய்வு செய்ய வேண்டி நீதிமன்றத்திற்கு காவல்ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் **அ.சா.ஆ.**29 ஆகும்.

**<u>1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

குறுக்குவிசாரணை இல்லை என்று கூறப்பட்டது.

**<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

பொதுவாக கடவுச்சீட்டு பெற்று ஒப்படைக்கும்போது என்ன பணி செய்தோம், எவ்வாறு செய்தோம் எந்த தேதியில் செய்யப்பட்டது அந்த பணி என்று முடிக்கப்பட்டது போன்ற விபபரங்களை எழுதி கடவுச்சீட்டை காவல் ஆய்வாளரிடம் திரும்பவும் ஒப்படைத்துவிடுவோம் என்றால் சரிதான். இந்த வழக்கிலும் பணி முடித்து கடவுச்சீட்டு ஆய்வாளர் வசம் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான். என்னை விசாரித்தபோது அந்த கடவுச்சீட்டை காண்பித்துதான் ஆய்வாளர் விசாரித்தார் என்றால் சரிதான். 18.10.21 ம் தேதி மாதிரிச்சொத்துக்கள் நீதிமன்றத்தில் பெறப்பட்டு 20.10.2021 அன்று வட்டார தடய அறிவியல் துறையில் ஒப்படைக்கும் வரை மேற்படி சொத்து யாருடைய பாதுகாப்பில் எந்த இடத்தில் வைத்து பாதுகாக்கப்பட்டது என்பதற்கான எந்த விளக்கமும் நீதிமன்ற கோப்புக்களில் இல்லை என்றால் 18 ம் தேதி மாலை 6.00 மணிக்கு நீதிமன்றத்தில் பெற்றேன். 19.10.2021 அன்று மிலாடிநபி அரசு விடுமுறை என்பதால் மேற்படி சொத்தை துாத்துக்குடி போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவு அலுவலகத்தில் பாதுகாப்பாக வைத்திருந்து மீண்டும் 20.10.2021 ம் தேதி திருநெல்வேலி, வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைக்கப்பட்டது. போதைப்பொருள் தடுப்பு

அலுவலகத்தில் ஒரு நாள் வைத்திருந்த விபரம் குறித்து போலீசார் என்னை விசாரிக்கும்போது நீதிமன்றத்தில் அனுமதியும் பெறப்பட்டது என்று சொன்னால் சரிதான். ஒருநாள் எங்கள் அலுவலகத்தில் வைத்து பாதுகாக்கப்பட்ட விபரங்கள் கடவுச்சீட்டை பார்த்தால் தெரிந்துகொள்ளலாம் என்றால் சரிதான். நான் சொன்னபடி, சொன்ன விதத்தில் வழக்கு சொத்தை நீதிமன்றத்தில் பெற்று வட்டார தடய அறிவியல் துறை வசம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. நான் போலீஸ் தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆய்வகத்தில் மாதிரி பொட்டலங்களை ஒப்படைக்கும்போது பகுப்பாய்வகத்திலிருந்து ஒரு ரசீது கொடுப்பார்கள் என்றால் சரிதான். அந்த ரசீதில் கொண்டுசெல்லும் காவலர் மற்றும் ஆய்வகத்தின் அலுவலர் ஒருவரும் கையொப்பம் இடுவார்கள் என்றால் சரிதான். காவல்நிலையத்திலிருந்து என்னிடம் பகுப்பாய்வுக்கான வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்ட உறை ஒட்டப்பட்டிருந்ததா அல்லது ஒட்டப்படாமல் இருந்தததா என்றால் ஒட்டப்படாத உறையில் தான் தந்தார்கள். பகுப்பாய்வுக்கான வேண்டுகோள் கடிதத்துடன் வேறு என்னென்ன ஆவணங்களை கொடுத்து அனுப்பினார்கள் என்றால் படிவம்-91 மற்றும் செல்போன்கள் கொடுத்தனுப்பினார்கள். முதன்மை மாவட்ட சிறப்பு அமர்வு நீதிமன்றத்தில் மாதிரி பொட்டலங்கள் எடைபோட்டு பார்க்கப்பட்டதா, இல்லையா என்றால் எடைபோட்டு பார்க்கவில்லை. எத்தனை கிராம் எடையுள்ள மாதிரி பொட்டலங்களை ஒப்படைத்தேன் என்றால் ஒவ்வொரு பொட்டலமும் 50 கிராம் எடை கொண்டது. பகுப்பாய்கத்தில் இருந்து கொடுத்த ரசீதை நான் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்தேன். நான் முதல்விசாரணையில் சொன்னதுபோல், சொன்ன தேதியில் நான் பகுப்பாய்வகத்தில் ஒப்படைக்கவில்லை அதனால் தான் அந்த

ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் ஆய்வகத்தில் கொடுத்த மாதிரி பொட்டலங்களுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>4 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2 மற்றும் 3 ம் எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்குவிசாரணையை தமதாக ஏற்றுக்கொள்வதாக கூறப்பட்டது.

**<u>5 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

குறுக்குவிசாரணை இல்லை என்று கூறப்பட்டது.

**<u>மறுவிசாரணை; இல்லை.</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல
என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு
செய்யப்பட்டு வாசித்துக்காட்ட சாட்சியால் சரி
என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
தென்மாவட்ட இனக்கலவர வழக்குகள்
விசாரணை நீதிமன்றம், மதுரை.

மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
தென்மாவட்ட இனக்கலவர வழக்குகள்
விசாரணை நீதிமன்றம், மதுரை.